விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 03 புதன்கிழமை (17.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 29

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## வவுனியாவில் கிளைமோர் ஐந்து படையினர் பலி

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினருக்கு எதிராக நேற்று மாலை 5 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

புதுக்குளம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் மேலும் இருவர் காயம டைந்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை திட்டமிட்டவாறு ஆரம்பிக்கமுடியாத நிலை

### துணைவேந்தர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கற்றச் செயற்பாடுகளை எதிர்வரும் 22 ஆம் திகதி திட்டமிட்டவாறு ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்படுகிறது. இருந்த போதும் போதிய தரவுகள் தரப்படாமையால் வெளிமாவட்ட மாணவர்களின் பட்டியலைத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதலில் இரு பொலிஸார் மரணம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்றுக் காலை 8.10 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் இரு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை இலக்குவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பல பகுதிகளில் நேற்று இராணுவம்-புலிகள் கடும் மோதல்

### 30 புலிகள் பலி என்கிறது இராணுவம் | 45 இராணுவத்தினர் பலி என்கின்றனர் புலிகள்

(மட்டக்களப்பு)

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே நேற்று கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. வெருகல் பகுதியில் விடுதலைப் புலிகள் தங்கள் மீது தாக்குதல் நடத்த தயாராகவிருந்தவேளை அதை தாம் முறியடித்ததாகவும் இதில் 30 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாகவும் இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.


இதேவேளை வாகரையை ஆக்கிரமிக்கும் நோக்கில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் பதில் தாக்குதலை நடத்தியதாகவும் இதில் 45 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த -ரணில் நேற்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியகட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜ

உறுப்பினர்களை அரசு தனது பக்கம் இழுப்பதற்கு முயற்சிப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த குற்றச்சாட்டை ஜனாதிபதி மறுத்




(கொழும்பு)

ஐக்கிய தேசியகட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் நேற்று முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

அலரிமாளிகையில் நடைபெற்ற நேற்றைய சந்திப்பில் ஐக்கிய தேசியக்கட்சியின் சுமார் 15 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு தனது பக்கம் இழுப்பதற்கு முயற்சிப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த குற்றச்சாட்டை ஜனாதிபதி மறுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

தான் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து எந்தப் பாராளுமன்ற உறுப்பினரையும் பறித்தெடுக்க முயற்சிக் (04ஆம் பக்கம் பார்க்க)



# திருட்டு தொடர்பாக அறிவித்தால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்

## இராணுவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து அறிவிக்கும் பட்சத்தில் தாம் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து நடவடிக்கை எடுப்பதாக 512 ஆவது இராணுவப் பிரிவு அறிவித்துள்ளது.

தமது பிரிவுக்கு 222 7190 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சம்பவம் குறித்து தெரியப்படுத்தினால் தாம் உடனடியாக அவ்விடத்துக்கு வந்து நடவடிக்கை எடுப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# யாழ்.நகர மத்தியிலுள்ள புடைவைக்கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர மத்தியில் உள்ள சீமாட்டி புடைவைக்கடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவில் திருட்டு இடம் பெற்றுள்ளது. கடையின் மேற்பகுதியை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சுமார் 3 மில்லியன் ரூபா பெறுமதியான புடைவைகளை திருடிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்த திருமணப்புடைவைகள், ஆண்கள் அணியும் ஆடைகள் உள்ளிட்ட புடைவைகளும் கணனியும் திருடப்பட்டுள்ளதாக யாழ். (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கட்சியின் 11 எம்.பிக்கள் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து கட்சி தாவத் தயாராகவுள்ள 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பில் அரசுக்கு ஆதரவு வழங்கும் தமது திட்டம் தொடர்பாக 11 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துரையாடியுள்ளனர். இச் சந்திப்பு தொடர்பாக 11 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் தெரிவித்துள்ளதாவது;

எமது குழுவில் சிலருக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளன. அது தொடர்பாகவும் கலந்துரையாடினோம். எமது தரப்பில் முன்னாள் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய உட்பட 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சில நாட்களில் (04 ஆம் பக்கம் பார்க்க)

# சாவகச்சேரியில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி சப்பச்சி மாவடியில் இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வீட்டில் இருந்த சமயம் நேற்றுக் காலை 9 மணியளவில் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் சாவகச்சேரி ஞானோதய அக்கடமி நிர்வாகியான ஆறுமுகம் மார்க்கண்டு (வயது 60) என்ற குடும்பஸ்தரே சுட்டுக்கொல்லப் (04 ஆம் பக்கம் பார்க்க)

# 2007 புத்தாண்டு பலன்கள்



## கும்பம்

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3)

*தெய்வத்தின் துணையால் வெற்றிபெற முயற்சிக்கும் கும்பராசி நேயர்களே!*

உங்கள் ராசியாதிபதி சனி பகவான் ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் பலம் பெற்று அமர்ந்திருக்கிறார். அவரை பூர்ண சுபரான குருபகவான் பார்வையிடுகின்றார். எனவே உங்கள் செயல்களில் இருந்த தேக்க நிலை மாறி புது மெருகுடன் செயலாற்ற முனைவீர்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத நன்மைகளைப் பெறுவீர்கள்.

இந்தக் காலகட்டத்தில் தொழில் ஸ்தானத்தில் சற்று பலம் குறைந்து அமர்ந்துள்ள குரு பகவான் தொழிலில் சிறு முரண்பாடுகளை கொடுத்தாலும் அவரின் கனிவான பார்வை தனம், வாக்கு, குடும்ப ஸ்தானத்திற்கும் சுகஸ்தானத்திற்கும் சத்ரு ஸ்தானத்திற்கும் கிடைப்பது இழப்புகளைப் பெருமளவிற்கு மீட்டுத் தந்துவிடும். பொருளாதார நிலை படிப்படியாக உயரத் தொடங்கும். சிலர் வீடு, வாகனம் வாங்கும் யோகங்களை பெறுவார்கள். உங்களை எதிர்த்துப் போடப்பட்டிருந்த பொய் வழக்குகளும் உங்களுக்குச் சாதகமாகவே முடியும்.

பஞ்சமாதிபதி லாபஸ்தானத்திலும் பாக்கியாதிபதி விரய ஸ்தானத்தில் பாதகாதிபத்ய தோஷம் நீங்கப் பெற்றும் அமர்ந்திருப்பதால் புத்தக வெளியீடு, கலைத்துறை போன்றவை மூலம் வருமானம் கிடைக்கும். ராசியில் உள்ள ராகு பகவானும் களத்ர ஸ்தானத்தில் உள்ள கேது பகவானும் நண்பர்கள் மூலம் பல உதவி களைப் பெற்றுத் தருவார்கள். அதோடு உங்களின் தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். செல்வாக்கு மளமளவென்று உயரும்.

அதேசமயம் மூத்த சகோதர, சகோதரிகளின் வழியில் சிறு மனக்கிலேசங்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் விட்டுக் கொடுத்து நடந்துகொள்ளவும். பொதுவாக இந்தப் புத்தாண்டில் நினைத்த காரியங்கள் அனைத்தும் சிறு தடைகளுக்குப் பிறகு நிறைவேறும். சமூகத்தில் உங்களின் நிலை உயரும். பொருளாதார நிலையிலும் முன்னேற்றம் தென்படும். குடும்பத்தினரின் ஆதரவு முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் இருக்கும் மற்றபடி உடல் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அதேநேரம் ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

உத்யோகஸ்தர்கள் அனைத்து வேலைகளையும் திருப்திகரமாக முடிப்பார்கள். வருமானமும் படிப்படியாக உயரும். மேலதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாகவும் பக்க பலமாகவும் இருப்பார்கள். அலுவலக வேலைகளிலும் கஷ்டம் இராது.

வியாபாரிகளுக்கு இது லாபகரமான புத்தாண்டாகவே அமைகிறது. பொருட்களின் விற்பனை நன்றாக நடக்கும். அதேசமயம் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப விற்பனை முறைகளைக் கையாண்டால் நன்கு வெற்றி பெறலாம். மற்றைப்படி கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி நன்றாக இருக்கும் பழைய குத்தகைப் பாக்கிகள் வசூலாகும். பாசன வசதிகளில் கவனம் செலுத்துவீர்கள். அதே நேரம் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு சற்று செலவு செய்ய நேரிடும்.

இந்த ராசி அரசியல்வாதிகள் புதிய முயற்சிகளை திடத்துடன் செயல்படுத்துவார்கள். மேலிடத்தின் ஆதரவு இருப்பதால் புதிய பதவிகள் தேடிவரும். அதே சமயம் முரட்டுப் பிடிவாதங்களையும் முரணான சிந்தனைகளையும் தவிர்க்கவும் இதனால் உங்களின் புகழும் செல் வாக்கும் உயரும்.

கலைத்துறையினருக்கு பழைய ஒப்பந்தங்களை முடித்துக் கொடுப்பதில் சிரமங்கள் உண்டாகும்.

இருப்பினும் ரசிகர்களின் ஆதரவு உங்களுக்கு அமோகமாக இருப்பதால் கவலையில்லை அதோடு உங்களின் முயற்சியை மற்றவர்கள் பாராட்டுவார்கள். வரவேண்டிய பணமும் வந்து சேரும்.

பெண்மணிகள் கணவரால் பாராட்டப்படுவார்கள். இதனால் குடும்ப ஒற்றுமை ஓங்கும். குழந்தைகளால் சந்தோஷம் கிடைக்கும்.

மாணவமணிகள் படிப்பில் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். பெற்றோர்களின் ஆதரவுடன் உங்களின் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நண்பர்களும் உதவி செய்வார்கள்.

*பரிகாரம்:- பெருமாளை தரிசித்து வரவும் நமோ நாராயணாய என்று ஜபித்து வரவும்.*

(தொடரும்)

# சு.கவின் நிறைவேற்று குழுக் கூட்டத்தின் பின்னரே அமைச்சரவையில் மாற்றம்

## ஜனாதிபதி நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் பெரும்பான்மையை நிரூபிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை உள்வாங்கி அமைச்சரவையை மாற்றியமைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளநிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழு எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அவசரமாக கூடவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ள நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உறுப்பினர்களுக்கு கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களை இணைத்துக் கொள்வது தொடர்பிலும் அமைச்சரவை மாற்றங்கள்குறித்தும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பல உறுப்பினர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்நிலையில் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் பின்னரே அமைச்சரவை மாற்றியமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவுள்ள உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காக ஆளும் கட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுப் பதவிகளை வகுப்பவர்களிடம் இருந்து அமைச்சுக்களை மீளப் பெற்று புதியவர்களுக்கு வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இத்தகைய நடவடிக்கையினால் அதிருப்தியடைந்த பலர் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துப் பேசி வருகின்றனர்.

இந்த நிலையில் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்கும் வகையிலேயே சுதந்திரக் கட்சி செயலாளர் மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தைக் கூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையை மாற்றியமைப்பது குறித்து சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றார்.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் நிறைவடைந்ததும் அடுத்த வாரம் அளவிலேயே அமைச்சரவையை மாற்றியமைக்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கட்சிக்குள் அதிருப்தி எழுந்துள்ளது. அதனைப் போக்குவது அவசியமாகும். அதற்காகவே நிறைவேற்றுக் குழு கூடுகின்றது என்று சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகளை இணைப்பது தொடர்பிலும் பேச்சுவார்த்தையில் அரச தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். (ச)

## கேணல் கிட்டுவின் 14 ஆம் ஆண்டு நினைவு

மூத்த தளபதி கேணல் கிட்டு மற்றும் 9 வேங்கைகளின் 14 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தமிழீழ அரசியல்துறை நடுவப் பணியகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பொதுச்சுடரை மூன்று மாவீரர்களின் தாயான தவமணி அம்மா ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

ஈகச்சுடரை சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த போராளி யாழ்மதி ஏற்றினார். கேணல் கிட்டு அவர்களின் திருவுருவப் படத்திற்கு சோ.தங்கன் சுடரேற்றி மாலை அணிவித்தார். தொடர்ந்து 9 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டது. (எ-1)


## வடமராட்சியில் நேற்று தாக்குதல்

வடமராட்சி திக்கம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு இச் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. கைக்குண்டுத் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனையடுத்து இராணுவத்தினரும் திருப்பிச் சுட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை நேற்று மாலை 4.30 மணிக்குப் பருத்தித்துறை நாவலடிப் பகுதியிலுள்ள இராணுவக் காவலரண் மீது துப்பாக்கித் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரண்டு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். (எ-101)



யாழ்.நகரப் பகுதியிலுள்ள சீமாட்டி புடைவைக் கடையில் திருட்டு இடம்பெற்ற பின் விசிறப்பட்ட நிலையில் காணப்படும் புடைவைகளைப் படத்தில் காணலாம். படம்:-திலீவின்பன்

## வெட்டுக் காயத்துடன் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பிரிவுக்குட்பட்ட வீச்சுக் கல்முனைவாவியிலிருந்து சடலம் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கன்னங்குடா மண்டபத்தடியைச் சேர்ந்த வர்த்தகரான சிவலிங்கம் இராஜேந்திரன் (வயது-28) என்பவரது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீன் பிடிப்பதற்காக வாவிக்குச் சென்ற ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் இந்தச் சடலத்தை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சடலத்தின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டிருந்ததுடன் உடலில் கூரிய ஆயுதங்களினால் ஏற்படுத்தப்பட்ட பத்துக் காயங்கள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## மகேஸ்வரன் எம்.பியின் கப்பலிலிருந்து வேறு கப்பலுக்குப் பொருள்கள் மாற்றம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.மகேஸ்வரனுக்குச் சொந்தமான கப்பலில் ஏற்றப்பட்டிருந்த பொருள்கள் வேறு ஒரு கப்பலில் ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்வதற்காக கிம்ரன் பனாமா கப்பல் தென்னாபிரிக்காவில் இருந்து பொருள்களை ஏற்றி வந்திருந்தது.

எனினும் இந்தக் கப்பலில் விமானம் ஒன்றின் பாகம் இருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையிலேயே இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டிருந்த பொருள்கள் வேறு ஒரு கப்பலில் ஏற்றுவதாகக் கொழும்புத்துறைமுகத் தரவுகள் தெரிவிக்கின்றன. எனினும் தமது கப்பலில் இருந்ததாகக் கூறப்படும் விமானப் பாகம் தொடர்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மகேஸ்வரன் எம்.பி. மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5,9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஜோர்ச்-பேணடேற் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெமல்டா ஜோர்ச் அவர்கள் சபரகமுவப் பல்கலைக்கழகத்தின் Faculty of Social Science and Languages B.A (Tamil Special) பட்டமளிப்பு வைபவம் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்திய சிவாஜி பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சுளங்கே அவர்களிடமிருந்து பட்டத்தினைப் பெற்றுக் கொண்டமையை பாராட்டி வாழ்த்துவதோடு, இறைவன் அருளிய நன்மைத்தனங்களுக்காக நன்றித் திருப்பலி 17.01.2007 இன்று காலை 6 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுகின்றோம்.



சென் றொசாறியன் சனசமூக நிலையம், கொழும்புத்துறை.

(ே-591)

தேவை ஏற்படாதவரை நண்பனை தெரிந்து கொள்ள முடியாது.

—அப்துர்-றஹீம்

வலம்புரி

## புரிந்துணர்வு எழுத்தில் அல்ல மனதில் ஏற்பட வேண்டும்

இலங்கை அரசியலில் 'புரிந்துணர்வு' என்ற சொற் பதத்திற்குப் பஞ்சமேயில்லை. எதற் கொடுத் தாலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ப தே முதலில் பேசப்படுகின்றது.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, சிறிலங் கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சி யும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம், இப்போது அரசும் சிறிலங்கா முஸ்லிம் காங்கி ஸும் செய்யவுள்ள புரிந்துணர்வு உடன்படிக் கை என எதற்கெடுத்தாலும் உடன்படிக்கை எழுதுவதும் அதில் ஒப்பமிடுவதும் சாதாரண நிகழ்வாகிவிட்டது.

இலங்கையின் அரசியலில் அரசும் விடுத லைப்புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெறக்கூடியது.

நாட்டில் நடக்கும் யுத்தத்தை முடிபுக்குக் கொண்டு வரும் நோக்கில் நோர்வேயின் அய ராத முயற்சி காரணமாக 2002 ஆம் ஆண்டில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது.

எனினும் அந்த ஒப்பந்தம் எழுத்திலிருந்து செயலுருப் பெறாத காரணத்தால் மீண்டும் யுத் தம் முகிழ்ப்புப் பெற்றது.

நாட்டின் அமைதியைத் தரக்கூடிய யுத்த நிறுத்த உடன்படிக்கையைக் காப்பாற்றுவதில் அரசு காட்டிய அசமந்தம், நாட்டில் மனிதப் படு கொலைகளும் பட்டினிச்சாவுகளும் இடம்பெறு வதற்கு காரணமாயிற்று.

மனிதப் படுகொலைகள் என்பது இனரீதியாக நிறுத்தப்படக் கூடியதல்ல. இந்த உண்மை உணரப்பட வேண்டியதாகும்.

நாடுபூராகவும் மனித வாழ்வியலுக்கு பாது காப்புக் கிடைக்க வேண்டும். இனரீதியான பாகு பாடு ஆளுந்தரப்பிடமிருக்கும்வரை புரிந்து ணர்வு உடன்படிக்கை என்பது எழுத்து வடிவத் தில் இருக்க முடியுமேயன்றி அது செயலுருப் பெறமாட்டாது.

யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்யப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்த நிலை யிலும் அதனை உள்ளவாறு அமுல்படுத்த முடி யாது போனமைக்கான காரணம் என்ன? என் பது அறியப்பட வேண்டியதாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடு வதை ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகள் கடுமையாக விமர்சித்தும் எதிர்த்தும் வந்தன.

நாட்டில் அமைதியை, சமாதானத்தை ஏற் படுத்தக் கூடிய யுத்தநிறுத்த உடன்படிக்கை யை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நாட்டின் எந்தவொரு மூலையில் ஏற்படுமாக விருந்தாலும் அது ஆபத்தானதேயன்றி அதில் வேறு எந்த அனுகூலமும் இருக்க முடியாது.

ஆக, புரிந்துணர்வு என்பது எழுத்திலன்றி மனதில் ஏற்பட வேண்டும். மனமாற்றமில்லாத புரிந்துணர்வுகள் இடைவழியில் அறுந்து போவது உறுதி. அதுவே இலங்கையில் நடக்கின் றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசி யக் கட்சியும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப் பந்தத்தை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளித்தாலும் காப்பாற்ற முடியாது என்ற நிலையில், இப்போது அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் 'புரிந்துணர்வு' ஒப் பந்தம் ஏற்படவிருப்பது சிரிப்பிற்குரியதே.

# பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய திறமையான மாணவர்க ளின் பரீட்சைப் பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கான சந் தர்ப்பம் ஒன்றை வழங்கப் பரீட்சைத் திணைக்களம் முடிவு செய்திருப்பதாகத் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித் துள்ளார்.

எதிர் காலத்திலும் இப்பரீட்சை தொடர்பில் மீளாய்வு முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


கடந்த 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற் றிய பல திறமையான மாணவர்கள் சித்தியடையாமையைச் சுட்டிக்காட்டி பாடசாலை அதிபர்களும் பெற்றோர்களும் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்ததையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய விண்ணப்பங்களை மாணவர்கள் பாடசாலை மட்டத்தில் வெளிபடுத்திய திறமைக ளுக்கான அத்தாட்சிப்படுத்திய சான்றுகளுடன் அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் மூலம் பரீட்சைத் திணைக்கள த்திற்கு விண்ணப்பிக்க கோரப்படுகின்றது.

இப் பரீட்சை மீளாய்வுக் கோரிக்கைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனப்பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)

# போர்நிறுத்த உடன்படிக்கை 5 வருடத்தை பூர்த்தி செய்யாது

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரங்களை ஒழிப்பதற்கும் விடுதலைப்புலிகளுடன் போராடவும் நாம் பிரசாரங்களை மேற்கொண்டோம். அதன் பயனாக இடைக்கால தன் னாட்சி சபை என்ற இடைக்காலத் தீர்வுத் திட்டத்தை நிறுத்தி விட்டோம் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத் தலைவரும் அந்த அமைப்பின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச, போரும் சமாதானமும் என்ற தலைப்பில் மாத்தளை நகர மண்டபத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு விரைவில் 5 வருடங்களைப் பூர்த்தி செய்யவுள்ளது. இந்தச் சட்டவிரோத உடன்பாட்டை 5 வருடங்கள் பூர்த்தி செய்ய விடாது தடுக்கும்படி நாம் அரசைக் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையும் இணைத் தலைமை நாடுகளும் அரசையும் விடுதலைப்புலிகளையும் சமதரப்பாக்க முயலுகின்றன. சர்வதேச மேற்பார்வையில் கிழக்கு தீமோரில் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தம்தான் அந்த நாடு இன்று பிரிவ டைய உதவியது எனவும் தனது உரையில் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஏ-5)

# ஐ.தே.க.எம்.பிக்களை அரசு இணைத்தால் அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்தாகும்

## ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை எப்பொழுது அரசு தன்னுடன் இணைத்துக் கொள்கின்றதோ அன்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அரசுக்குமிடையில் ஏற் படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இரத்துச் செய் யப்படுமென ஐக்கிய தேசியக் கட்சி துணைப் பொதுச் செய லாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களை அரசில் இணைத் துக் கொள்வதானது நாட்டிற்கும் சமாதான முயற்சிகளுக் கும் பேரழிவாக இது அமையும். ஜனாதிபதிக்கும் எமது கட் சித் தலைவருக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் இது குறித்து விளக்கமளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள் ளார்.

தமது சொந்த நலனுக்காக அமைச்சுப் பொறுப்பை ஏற் பதற்கென சில எம்.பிக்கள் உள்ளனர். அவர்கள் நாட்டின் பரந்துபட்ட நலனைப் பார்க்காமல் தமது குறுகிய நலனுக் காக அமைச்சராவதற்கு விரும்புகின்றார்கள்.

1978 ஆம் ஆண்டு அரசியமைப்பின் மூலம் அறிமுக மான விகிதாசாரத் தேர்தலின் மூலம் வாக்களிக்கின்ற மக் கள் ஒரு கட்சிக்கே வாக்களிக்கின்றனர். எனவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு விழுந்த வாக்குள் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களான இவர்கள் தற்பொழுது மக்களின் விருப் பத்திற்கு எதிராக தமது சொந்த நலனுக்காக கட்சி மாறுகின் றார்கள் என ஜயலத் எம்.பி. குற்றஞ்சாட்டினார். (ச)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் ஆராய்வு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் குற் றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் ஆராயப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை கொழும்புப் பிரதம நீதிவான் நீதி மன்றிலிருந்து பெற்றதன் பின்னர் வங்கிக் கணக்குகள் ஆரா யப்பட்டதாக நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்புத் தலைமை யகம் உட்பட ஐந்து பிரதேச அலுவலகங்களின் வங்கிக் கணக்குகளே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

வெள்ளவத்தை, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவு னியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய நகரங்களிலுள்ள வங்கி வைப்புக் கணக்குகளே குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தினால் ஆராயப்பட்டுள்ளன.

இதேவேளை புனர்வாழ்வுக் கழகத்தின் தலைமையலுவ லகம் உட்பட பிரதேச அலுவலகங்களிலுள்ள கணனிகள் அனைத்தையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றி நீதிவான் நீதிமன்றில் நேற்று ஒப்படைத்துள்ளனர்.

அக் கணனிகளை கொழும்புப் பல்கலைக்கழக கணனித் தொழில்நுட்பத் துறையின் பீடாதிபதியிடம் ஒப்படைத்து அறிக் கை ஒன்றைப் பெறுவதற்கு அனுமதிக்குமாறு குற்றப்புல னாய்வுத் திணைக்களம் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. (ச)

# வடக்குக் கிழக்கில் சிவிலியன்கள் பெரும் நெருக்கடிக்குள் வாழ்ந்து வருகின்றனர்

## எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு அறிக்கை

உதவிகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் வடக்குக் கிழக் கில் சிவிலியன்கள் பெரும் நெருக்கடிக்குள் வாழ்கின்றனர். மோதலில் ஈடுபடும் சகல தரப்புக்களும் மனிதாபிமான தொண்டு நிறுவன பணியாளர்களின் சுதந்திரத்திற்கும் நடு நிலைத் தன்மைக்கும் மதிப்பளிக்க வேண்டுமென எல்லை களற்ற மருத்துவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோதல்கள் நடைபெறும் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மற்றும் அங்கு பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பாக எல்லைகளற்ற மருத்து வர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பணியாற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டு மிகவும் கடுமை யான ஆண்டாக அமைந்துள்ளது. பெருமளவான மக்கள் உள்ளக இடப்பெயர்வுக்கு உட்பட்டதுடன் அரசசார்பற்ற நிறு வனங்களுக்கு எதிராக சிறியதும் பாராதூரமான தாக்குதல் கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனால் அந்நிறுவனங்கள் கடந்த வருடம் பாரிய சிக் கல்களுக்கு முகம் கொடுத்தன. மோதல் இடம்பெறும் பகுதி களில் பொதுமக்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகின்றார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 368 பேர் காணாமல் போயுள்ளனர்

யாழ்.குடாநாட்டில் கடந்த வருடம் 368 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 31 பேர் யாழ்.சிறைச்சாலையில் அடைக்கலம் புகுந்துள்ளதாகவும் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது; 368 பேரில் பெரும்பான்மையானோர் கடந்த ஆகஸ்ட் மாதத்திற்குப் பின்னரே காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

வெள்ளை வானில் வந்தோர், சீருடை அணிந்தோர் மற்றும் ஆயுதக்குழுவினரே தமது குடும்ப அங்கத்தவர்களை கடத்திச் சென்றதாக முறைப்பாடுகளில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

உறவினர்களின் தகவலின்படி விசாரணைகள் மேற்கொண்டபோதுகாணாமல் போனோர் எவரையும் கண்டு பிடிக்க முடியவில்லை. எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்குட்பட்டே நாம் செயற்பட முடியும்.

அதற்கு அப்பால் எதனையும் செய்ய முடியாது. உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி கடந்த வருடம் 31 பேரும் இவ்வருடம் 5 பேரும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சரணடைந்துள்ளனர். இவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச)

# ஊடகவியலாளர் சிவராம் கொலை வழக்கு யூரிசபையின் முன் விசாரிக்க அனுமதி!

(கொழும்பு)

ஊடகவியலாளர் ரி.சிவராம் கொலை தொடர்பான விசாரணைகளை யூரிகள் முன்னிலையில் நடத்துவதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.எ.டி.ரத்னாயக்கா நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

யூரிகள் முன்னிலையில் வழக்கு விசாரணைகளை மே மாதம் 14 ஆம் திகதி நடத்துமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.இவ் வழக்கின் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவொன்றை பரிசீலனை செய்த பின்னர் சிங்கள மொழி பேசக் கூடிய யூரிகள் முன்னிலையில் விசாரணைகளை நடாத்துவதற்கு மேல் நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி ஊடகவியலாளர் ரி.சிவராம் பம்பலப்பிட்டியவிலிருந்து கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக ஒரு பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். (ச)

# ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் எம்.பிக்களை தடுத்திருக்கலாம்

## எஸ்.பி.திஸ்ஸநாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நினைத்தால் கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ள 20 பாராளுமன்ற உறுப்பினர்களையும் இன்றே தடுத்து நிறுத்திவிடலாம். ஆனால் ரணில் தனது தலைமைப்பதவியை தக்க வைத்துக்கொள்வதில் மட்டுமே குறியாக இருக்கிறார் என்று ஐ.தே.கவின் முன்னாள் தேசிய அமைப்புச் செயலாளர் எஸ்.பி. திஸ்ஸ நாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சிலிருந்து 18 க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்கொள்ளவுள்ளதாக வெளிவரும் செய்திகள் குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது உறுதியாகிவிட்டது. நேற்று முன்தினம் மாலை சில எம்.பிக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க தனது தலைமைப் பதவியை தக்கவைத்துக் கொள்வதற்காக மௌனமாக இருக்கிறார் என்று அவர் குற்றஞ்சாட்டினார். (ச)

## ஜனாதிபதி மகிந்த...

கவில்லை எனவும் மாறாக அரசுடன் இணைய முன்வந்த எதிர்க்கட்சி பாராளு மன்ற உறுப்பினர்களை மட்டுமே அரவணைத்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தனது கட்சி உறுப்பினர்களை அரசு தனது பக்கம் பிரித்தெடுக்கும் முயற்சியானது இனப்பிரச்சினை உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து முக்கிய விடயங்களில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பொது இணக்கப்பாடு ஒன்றின் அடிப்படையில் இணைந்து செயற்படுவதென அண்மையில் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணானது என்றும் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

இதேவேளை இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கட்சித் தாவல்கள் குறித்து எவ்வித தகவல்களும் இடம் பெறவில்லை என தெரிவித்துள்ளது. நேற்று இடம் பெற்ற சந்திப்பானது முக்கிய ஒன்றானது என தெரிவித்த ஐக்கிய தேசியக்கட்சி இது தொடர்பாக இருவரும் மீண்டும் ஒருதடவை சந்தித்துப் பேசுவர் என தெரிவித்தது. (ச)

## சாவகச்சேரியில்...

பட்டவராவார்.

வீட்டிலிருந்த வேளை அங்கு சென்ற இனந்தெரியாத மூவர் வெளியே இழுத்து வந்து அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு சென்றதாக விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் (எ-5)

## யாழ்.நகர மத்தியிலுள்ள...

பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. சம்பவம் இடம் பெற்றபோது காவலாளிகள் இருந்த போதிலும் பயத்தின் காரணமாக அவர்கள் சம்பவ இடத்திற்குச் செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டது.

களவாடப்பட்ட பொருள்களில் இரண்டு பொதிகளையும் திருடனின் காலணியும் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்.பொலிஸார் நேரில் சென்று மேற்கொண்டதுடன் தடயங்களையும் மீட்டுச் சென்றுள்ளனர்.

இப் புடைவைக்கடையில் கடந்த மாதம் 13 ஆம் திகதி 2 மில்லியன் ரூபா பெறுமதியான புடைவைகள் திருடப்பட்டதாக உரிமையாளர் தெரிவித்தார். இதேவேளை யாழ். குடாநாட்டில் இடம் பெற்றுவரும் தொடர் திருட்டுச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.தற்கால அமைதியற்ற சூழ் நிலையில் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருவதால் செய்வதறியாது மக்கள் பீதியடைந்துள்ளனர். (ச-3)

## ஐ.தே.கட்சியின் 11 எம்.பிக்கள்...

அரசில் இணையவுள்ளனர்.

அடுத்த வாரம் நடைபெறவுள்ள அமைச்சரவை மறுசீரமைப்பில் எமக்கு மகிந்த குறிப்பிட்டத்தக்க அளவு அமைச்சுப் பொறுப்புக்கள் தர சம்மதித்துள்ளார். ஜீ.எல்.பீரிஸ்,எம்.எச். மொகமட் ,பி.தயாரட்ண ,மிலிந்த மொறகொட, ராஜித சேனாரட்ன,தர்மதாச பண்டா,ஹேம குமார நாணயக்கார, நவீன் திஸ்ஸநாயக்க, ரஞ்சித் மடுமபண்டார,மனோ விஜயரட்ண ஆகியோரே அரசு பக்கம் சாயவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆவர்.

அதிக எண்ணிக்கையிலான ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசில் சேர ஆர்வமாகவுள்ளனர். ஆனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறக் கூடிய அளவு எண்ணிக்கையானோரை இணைப்பதற்கே மகிந்த ஆர்வமாகவுள்ளார்.

இது தவிர ஐக்கிய தேசியக்கட்சியைத் தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையில் வைத்திருக்க மகிந்த விரும்புவதனால் குறிப்பிட்ட அளவானோரை மட்டுமே உள்வாங்கத் தீர்மானித்துள்ளார் என்றார் அவர்.

இச் சந்திப்புக்கு முன்னர் கட்சி தாவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரு ஜயசூரியாவின் இல்லத்தில் ஒன்றுகூடி தமது நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.ஆனால் அரசின் இம் முயற்சியானது ரணில் -மகிந்த செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கடுமையாகப் பாதிக்கும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தது குறிப் பிடத்தக்கது.

தமது உறுப்பினர்கள் கட்சி தாவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திஸ்ஸநாயக்க தெரிவித்தார்.

எனினும் அவர்களை நாம் தொல்லைப் படுத்தப்போவதில்லை. கட்சி தனது கட்டுப்பாட்டை இழந்து வருகிறது. ஒரு நாள் அவர்களை நாம் மீளப்பெற்றுக்கொள்வோம் என அவர் என மேலும் தெரிவித்தார். (ச-5)

## கிளைமோர்த்...

இந்தக் கிளைமோர்,மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. இந்த கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-9)

## பல்கலைக்கழக...

தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவும் மாணவர் வதிவிடங்களாக உபயோகிக்க தனியார் கட்டடங்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவும் முன்னர் அறிவித்தபடி ஜனவரி மாதம் 22 ஆம் திகதி கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது சாத்தியமாகாது. எனினும் இயன்ற அளவு விரைவில் ஒரு சில வாரங்களுள் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.ஆரம்பிக்கப்படும் புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படுமென பதில் துணைவேந்தரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வவுனியாவில்...

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை சம்பவம் இடம் பெற்ற இடத்தை சுற்றிவளைத்து இராணுவத்தினர் தேடுதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## கிழக்கில் பல பகுதிகளில்...

பனிச்சங்கேணியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இதன்போது இராணுவம் முன்னேறி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான ஈச்சிலம்பற்று மற்றும் உப்பாறுப் பகுதிகளை தம் வசம் கொண்டு வந்ததாகவும் கைப்பற்றப்பட்ட இடங்களை இராணுவத்தினர் பலப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதலில் இராணுவத்தரப்பில் நால்வர் பலியானதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் தரப்பில் 30 பேர் கொல்லப்பட்டிருக்கலாம். அது குறித்து உறுதிப்படுத்திய தகவல்கள் எவையும் வெளியாகவில்லை என்றார்.

இதேவேளை அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்ட விடுதலைப்புலிகளின் பகுதிகளில் சித்திரவதைக்கூடங்கள் மற்றும் கஞ்சா பயிரிடப்பட்ட நிலங்கள் இருப்பதாக அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வாகரையை ஆக்கிரமிக்கும் நோக்கில் படையினர் நேற்று மும்முனைகளில் பாரிய படைநகர்வுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை, மூதூர் கிழக்கு உப்பாறில் இருந்து இலங்கைத்துறை முகத்துவாரம் வழியாக ஒரு முனையிலும் மாங்கேணியிலிருந்து பனிச்சங்கேணி நோக்கியும் மும்முனைகளிலும் படையினர் ஆக்கிரமிப்பு நகர்வுகளை மேற்கொண்டனர்.

செறிவான வான் மற்றும் எறிகணை தாக்குதல்களுடன் படையினர் நகர்வுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் படையினரால் கஜுவத்தை மற்றும் கல்லாறு படை முகாம்களில் இருந்து பல்குழல் எறிகணைத் தாக்குதல்கள் மிகச் செறிவாக நடத்தப்பட்டன.

வான்படையினரின் கிபீர் விமானத்தாக்குதல்களும் அதிகளவில் நடத்தப்பட்டன. இந்த செறிவான சூட்டு ஆதரவுடன் மாங்கேணியில் இருந்து பனிச்சங்கேணி நோக்கி ஆக்கிரமிக்கும் நோக்கில் படையினர் படை நகர்வை மேற்கொண்டனர்.

முற்பகல் 8.45 மணியளவிலும் பிற்பகல் 1.50 மணியளவிலும் கதிரவெளி மற்றும் பால்சேனை பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீது கிபீர் விமானங்கள் தாக்குதலை நடத்தியுள்ளன.

மூதூர் கிழக்கு வழியிலும் மாங்கேணி பனிச்சங்கேணி வழியிலும் இந்த ஆக்கிரமிப்பு நகர்வை படையினர் மேற்கொண்டனர். மதியத்துடன் தாக்குதல்கள் ஓய்ந்த நிலை காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்த் தாக்குதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் 7 போராளிகள் காயமடைந்துள்ளனர் என்று விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தரப்பில் 45 பேர் கொல்லப்பட்டும் 150 பேர் வரை படுகாயமடைந்ததாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம் தெரிவித்துள்ளது. இதேவேளை அதிரடிப் படையினரின் குற்றச்சாட்டுக்குறித்தும் சமாதானச் செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (ச-5)


# மரண அறிவித்தல்

## திருமதி தில்லைநாயகி சிவசுப்பிரமணியம்

271/6 நாவலர் ஒழுங்கை,ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாயகி சிவசுப்பிரமணியம் அவர்கள்(16.01.2007) நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா- நாகரட்ணம் தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற சரவணையூர் மார்க்கண்டு-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், இ.மா.சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அருமை மனைவியும், சிவநேசன் (கல்வி அமைச்சு இசுறுபாய), சிவசங்கர் (ஆசிரிய மாணவன் கோப்பாய் ஆசிரிய கலாசாலை), சிவதர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

காலஞ்சென்ற விஜயநாதன் மற்றும் சபாநாதன், லோகநாயகி (அமரர்), சுந்தரலிங்கம், திருமங்களநாயகி, செல்வநாயகி, ஞானதேவன் (பின்லாந்து), இராஜநாதன் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கலைமகள் (கனடா), பாலசுப்பிரமணியம், கைலாசபதி (பதி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் , அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

271/6 நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்,
இ.மா.சிவசுப்பிரமணியம்.
(ஓய்வுபெற்ற ஆசிரியர்,கொக்குவில் இந்துக்கல்லூரி)
(கணவர்)

தொலைபேசி இல.021 222 8080

(732)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.